# SUNDAY SCHOOL SYLLABUS

# TAMIL

# STANDARD 2

## 1997

### பொருளடக்கம்


1. ஆபிரகாமின் விருந்தினர்
2. லோத்து சோதோமை விட்டு ஓடிப்போனது
3. ஈசாக்கு பலியாக ஒப்புக்கொடுக்கப்பட்டது
4. ஏசா சேஷ்ட புத்திரபாகத்தை இழந்தது
5. யாக்கோபு கண்ட சொப்பணம்
6. யாக்கோபு தேவதூதனோடு போராடியது
7. யோசேப்பின் இரு சொப்பணங்கள்
8. சிறைச்சாலையில் யோசேப்பு
9. எகிப்தில் யோசேப்பு (பகுதி I)
10. எகிப்தில் யோசேப்பு (பகுதி II)
11. முப்பத்தெட்டு வருடங்களாக வியாதியாயிருந்த மனுஷன் சுகமாக்கப்பட்டது
12. பேதுருவும் மீன்பிடித்தலும்
13. இயேசு திமிர்வாதக்காரனைச் சுகமாக்கியது
14. இயேசு பன்னிரண்டு அப்போஸ்தலரைத் தெரிந்தெடுத்தது
15. நூற்றுக்கு அதிபதியின் வேலைக்காரன் சுகம் பெற்றது
16. இயேசு நாயீனூர் விதவையின் மகனை உயிரோடெழுப்பியது
17. பிள்ளைகளின் நண்பர்
18. இயேசு குருடனாயிருந்த பர்திமேயுவுக்குப் பார்வையளித்தது
19. விதவையின் காணிக்கை
20. இயேசு காற்றையும் கடலையும் அமர்த்தினது

## பாடம் 1

## ஆபிரகாமின் விருந்தினர்

ஆதி. 18:1-14 ; 19:1

**பொருளடக்கம்:**

1. ஆபிரகாம் கூடாரவாசலில் உட்கார்ந்து கொண்டிருந்தபோது, மூன்று புருஷர் தன் கூடாரத்திற்கு வருவதைக் கண்டான். அவன் அவர்களைச் சந்திக்கும்படி அவர்களுக்கு எதிர்கொண்டு ஓடினான் (ஆதி. 18:1, 2). உண்மையில் அவர்கள் மனுஷர் அல்ல; தேவனும், இரு தூதர்களுமாவர் (ஆதி. 18:22, 33 ; 19:1).

2. ஆபிரகாம் அவர்களுக்கு அப்பம், வெண்ணெய், பால், சமைப்பித்த கன்று இவற்றைக் கொடுத்து உபசரித்தான் (ஆதி. 18:6, 8).

3. தேவன் ஆபிரகாமுக்குக் கொடுத்த வாக்குத்தத்தம் (ஆதி. 18:10).

4. சாராளின் அவிசுவாசம் (ஆதி. 18:12).

5. கர்த்தர் தம் வாக்குத்தத்தத்தை உறுதிப்படுத்தினார் (ஆதி. 18:14).

**போதனை:**

நம்முடைய வீட்டிற்குங்கூட கர்த்தரும் அவருடைய தூதர்களும் வரக்கூடும். எனவே அந்நியரை உபசரிக்க நாம் மறக்கக் கூடாது.

**மனப்பாடம்:** எபிரெயர் 13:2

-------------

## பாடம் 2

## லோத்து சோதோமைவிட்டு ஓடிப்போனது

ஆதி. 19:1-26

**பொருளடக்கம்:**

1. சோதோம், கொமோரா பட்டணங்களின் பாவம் மிகவும் கொடிதாயிருந்தது. அவர்கள் கூக்குரல் கர்த்தரிடத்தில் போய் எட்டியது (ஆதி. 18:20, 21).

2. லோத்து சோதோமின் வாசலில் உட்கார்ந்திருந்தபோது இரு தூதர்கள் சோதோமுக்கு வந்தனர் (ஆதி. 19:1).

3. லோத்து அவர்களை வரவேற்று, தன் வீட்டில் ஏற்றுக் கொண்டு அவர்களை உபசரித்தான் (ஆதி. 19:2, 3).

4. சோதோமின் மனிதர் தூதர்களைத் தாக்கும்படி வந்தனர் (ஆதி. 19:4, 5).

5. அம்மனிதருக்குக் குருட்டாட்டம் பிடித்தது (ஆதி. 19:11).

6. தூதர்கள், சோதோம் அழிக்கப்படப் போகிறது என்ற தேவனுடைய தூதை லோத்திற்குக் கொடுத்தனர். அவன் தன் குடும்பத்தோடு பட்டணத்தை விட்டு சீக்கிரமாய் வெளியே போக வேண்டும் என்று அவர்கள் அவனுக்குப் புத்தி சொன்னார்கள். (ஆதி. 19:12-15).

7. லோத்து தாமதித்தபோது தூதர்கள் அவனையும், அவரது மனைவியையும், இரண்டு குமாரத்திகளையும் கைகளைப் பிடித்து பட்டணத்திற்கு வெளியே கொண்டுபோய் விட்டார்கள். அவர்கள் தங்கள் ஜீவன் தப்ப மலைக்கு ஓடிப்போக வேண்டும் என்றும், பின்னிட்டுப் பார்க்கக்கூடாது என்றும் அவர்களுக்குச் சொன்னார்கள் (ஆதி. 19:16, 17).

8. லோத்து மலைக்கு ஓடிப்போவதற்குப் பதிலாக அருகிலிருந்த சிறிய ஊருக்கு ஓடிப்போக அனுமதி கேட்டான். கர்த்தர் அவன் வேண்டிக்கொண்டபடி அனுமதித்தார் (ஆதி. 19:18-22).

9. அதன்பின் தேவன் சோதோமின் மேலும் கொமோராவின் மேலும் வானத்திலிருந்து கந்தகத்தையும் அக்கினியையும் வருஷிக்கப்பண்ணி, அந்தப் பட்டணங்களையும் அவைகளின் குடிகளையும் அழித்துப் போட்டார் (ஆதி. 19:24, 25).

10. லோத்தின் மனைவி பின்னிட்டுப் பார்த்து உப்புத்தூண் ஆனாள் (ஆதி. 19:26).

**போதனை:**

அக்கினிக்கிரையாக வைக்கப்பட்டுள்ள பாவ உலகத்தை விட்டு, பரலோக அடைக்கலத்திற்குள் போய்த் தப்பித்துக்கொள்ள வேண்டும் என்று கர்த்தர் தம்முடைய இரக்கத்தினிமித்தமாக தம் ஜனங்களை எச்சரிக்கிறார்.

**மனப்பாடம்:** I பேதுரு 3:12

-------------

## பாடம் 3

## ஈசாக்கு பலியாக ஒப்புக்கொடுக்கப்பட்டது

ஆதி. 22:1-18

**பொருளடக்கம்:**

1. ஆபிரகாமுக்கும் சாராளுக்கும் நீண்ட காலமாக பிள்ளையில்லாதிலிருந்தது. தேவனுடைய வாக்குத்தத்தின்படி ஆபிரகாமுக்கு நூறு வயதானபோது ஈசாக்கு பிறந்தான் (ஆதி. 21:5).

2. அதன் பின்னர் தேவன் ஆபிரகாமைச் சோதித்தார் (ஆதி. 22:1).

3. தேவன் ஆபிரகாமிடம், மோரியா தேசத்து மலைகள் ஒன்றில் ஈசாக்கைத் தகனபலியாக பலியிடச் சொன்னார் (ஆதி. 22:2).

4. ஆபிரகாம் கீழ்ப்படிந்து புறப்பட்டு மூன்று நாள் பிரயாணம் செய்து அந்த இடத்தை அடைந்தான் (ஆதி. 22:3, 4).

5. ‘நானும் பிள்ளையாண்டானும் அவ்விடமட்டும் போய், தொழுதுகொண்டு, உங்களிடத்துக்குத் திரும்பி வருவோம்’ என்று ஆபிரகாம் வேலைக்காரரிடம் சொன்ன விசுவாசத்தின் வார்த்தைகள் (ஆதி. 22:5).

6. ஈசாக்கு தகனபலிக்கான ஆட்டுக்குட்டியைப் பற்றிக் கேட்டபோது ஆபிரகாம், தேவன் பார்த்துக்கொள்வார் என்று பதிலுரைத்தான் (ஆதி. 22:7, 8).

7. ஆபிரகாம், ஈசாக்கைக் கட்டி, பலிபீடத்தின்மேல் அவனைக் கிடத்தி, அவனை வெட்டும்படிக்குக் கத்தியை எடுத்தான் (ஆதி. 22:9, 10).

8. கர்த்தருடைய தூதனானவர் அவனைத் தடுத்து, மகனைக் கொல்ல வேண்டாம் என்று கூறினார் (ஆதி. 22:11, 12).

9. ஈசாக்குக்குப் பதிலாக ஒரு ஆட்டுக்கடா பலியிடப்பட்டது. அந்த இடத்திற்கு ‘யேகோபாயீரே’ என்று பெயர் வைக்கப்பட்டது (ஆதி. 22:13, 14).

10. யேகோவாயீரே என்பதற்கு, ‘கர்த்தர் பார்த்துக் கொள்வார்’ என அர்த்தமாகும்.

**போதனை:**

ஆபிரகாமைப் போல நமக்குள்ள எல்லாவற்றைப் பார்க்கிலும் தேவனை அதிகமாய் நேசிக்கவும், முற்றிலுமாய் அவருக்குக் கீழ்ப்படியவும் வேண்டும்

**மனப்பாடம்:** I யோவான் 3:18.

-------------

பாடம் 4

## ஏசா சேஷ்டபுத்திரபாகத்தை இழந்தது

ஆதி. 25:21-34

**பொருளடக்கம்:**

1. ஈசாக்கின் மனைவியாகிய ரெபெக்காளுக்குப் பிறந்த இரட்டைப் பிள்ளைகள் (ஆதி. 25:21, 24).

2. அவர்களைக் குறித்துக் கர்த்தர் கொடுத்த வெளிப்படுத்தல் (ஆதி. 25:23).

3. மூத்த மகனாகிய ஏசா, வேட்டையில் வல்லவனும் வனசஞ்சாரியுமாயிருந்தான் (ஆதி. 25:27).

4. இளைய மகனாகிய யாக்கோபு, குணசாலியும் கூடாரவாசியுமாயிருந்தான் (ஆதி. 25:27).

5. ஏசா தகப்பனுக்குப் பிரியமானவன்; யாக்கோபு தாய்க்குப் பிரியமானவன் (ஆதி. 25:28).

6. ஏசா தன் பசியை ஆற்றிக்கொள்ளும்படி சேஷ்ட புத்திரபாகத்தை அலட்சியம் செய்தான் (ஆதி. 25:29-34).

**போதனை:**

ஒருவேளைப் போஜனத்திற்காக ஏசா தன் சேஷ்ட புத்திரபாகத்தை இழந்துபோனான். நாம் அவனைப் போல இவ்வுலகத்திற்குரிய சிற்றின்பங்களுக்காக மேன்மையான ஆவிக்குரிய ஆசீர்வாதங்களை இழந்துபோகக்கூடாது.

**மனப்பாடம்:** சங்கீதம் 94:19

-------------

## பாடம் 5

## யாக்கோபு கண்ட சொப்பனம்

ஆதி. 28:10-22

**பொருளடக்கம்:**

1. யாக்கோபு தன் சகோதரனாகிய ஏசாவுக்குப் பயந்து தன் தாயினுடைய ஆலோசனையின்படியே பெயெர்செபாவைவிட்டு ஆரானுக்கு ஓடிப்போனான் (ஆதி. 28:10).
[முன் சரித்திரத்தைச் சுருக்கமாகச் சொல்லிக்கொடுக்கவும் - ஆதி. 27:1-45)]

2. போகும் வழியில் சூரியன் அஸ்தமித்தபடியினால், அவ்விடத்துக் கற்களில் ஒன்றை எடுத்து தன் தலையின் கீழ்வைத்து அவன் நித்திரை செய்தான் (ஆதி. 28:11).

3. அப்பொழுது அவன் ஒரு சொப்பனம் கண்டான். ஒரு ஏணி பூமியிலே வைக்கப்பட்டிருந்தது; அதின் நுனி வானத்தை எட்டியிருந்தது. அதிலே தேவதூதர்கள் ஏறுகிறவர்களும் இறங்குகிறவர்களுமாய் இருந்தார்கள் (ஆதி. 28:12).

4. அதற்கு மேலாகக் கர்த்தர் நின்று: நான் உன் முன்பிதாக்களின் தேவன் என்று சொன்னார். ஆபிரகாமுக்கும் ஈசாக்குக்கும் கொடுத்த வாக்குத்தத்தங்களை அவர் யாக்கோபுக்கும் கொடுத்தார். (ஆதி. 28:13-15).

5. அவன் நித்திரை தெளிந்து விழித்தபோது, ‘மெய்யாகவே கர்த்தர் இந்த ஸ்தலத்தில் இருக்கிறார்’ என்று சொல்லி தன் தலையின் கீழ் வைத்திருந்த கல்லையெடுத்துத் தூணாக நிறுத்தி, அதின்மேல் எண்ணெய் வார்த்து, அந்த இடத்திற்குப் பெத்தேல் என்று பேரிட்டான் (ஆதி. 28:16-19).

6. 'பெத்தேல்’ என்பதன் அர்த்தம் தேவனுடைய வீடு என்பதாகும்.

**போதனை:**

நமக்கு உதவி செய்ய ஒருவரும் இல்லாமல் நாம் தனிமையாயிருக்கும்போது தேவன் தம்முடைய வாக்குத்தத்தங்களைத் தந்து நம்மைத் தேற்றுகிறார்.

**மனப்பாடம்:** சங்கீதம் 94:19

-------------

## பாடம் 6

## யாக்கோபு தேவதூதனோடு போராடியது

ஆதி. அதி. 32

**பொருளடக்கம்:**

1. யாக்கோபு ஒரு சந்தர்ப்பத்தில் ஏசாவை வஞ்சித்து அவனுடைய சேஷ்டபுத்திரபாகத்தைப் பெற்றுக்கொண்டபடியினாலும்., மற்றொரு சந்தர்ப்பத்தில் வஞ்சகமாய் **தகப்ப**னுடைய ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொண்டபடியினாலும் ஏசா யாக்கோபைப் பகைத்தான் (ஆதி. 27:36).

[ஆசிரியர்கள், ஆதி. 27:1-41-ஐ வாசித்து, ஏசாவுக்கு உண்டான பகையின் காரணங்களை மாணவர்களுக்குச் சுருக்கமாய் சொல்லிக் கொடுக்க வேண்டும்].

2. யாக்கோபு ஏசாவுக்குப் பயந்ததினால் தன் மாமன் வீட்டிற்குப் போய் அங்கு சில வருடங்கள் வசித்து, பின்பு அங்கிருந்து திரும்பி வந்து கொண்டிருந்தபோது, ஏசா நானூறு மனிதரோடுகூட அவனைச் சந்திக்கும்படி வருகிறான் என அவனுக்கு அறிவிக்கப்பட்டது. அவன் மிகவும் பயந்தான் (ஆதி. 32:6, 7).

3. யாக்கோபு தன்னைத் தன் சகோதரனுடைய கையிலிருந்து விடுதலையாக்கும்படி கர்த்தரிடம் ஜெபித்தான் (ஆதி. 32:11, 12).

4. ஏசாவை சாந்தப்படுத்தும்படி யாக்கோபு வெள்ளாடுகளையும், செம்மறியாடுகளையும், ஆட்டுக்கடாக்களையும், ஒட்டகங்களையும், காளைகளையும், கழுதைகளையும் வெகுமதிகளாக அனுப்பினான் (ஆதி. 32:13-15).

5. யாக்கோபு தன் மனைவிகளையும் குமாரரையும் யாப்போக்கு ஆற்றின் துறையைக் கடக்கச் செற்த பின்பு அவன் தனிமையாக இருந்தான். அங்கே அவன் தேவதூதனோடு போராடினான் (ஆதி. 32:22-24).

6. தூதனால் அவனை மேற்கொள்ள முடியாமற் போனபோது தூதன் அவனுடைய தொடைச் சந்தைத் தொட்டார். எனவே யாக்கோபின் தொடைச் சந்து சுளுக்கிற்று (ஆதி. 32:25).

7. தூதன் யாக்கோபிடம் தன்னைப் போக விடும்படி கேட்டார். அதற்கு யாக்கோபு, 'நீர் என்னை ஆசீர்வதித்தா லொழிய உம்மைப் போகவிடேன்' என்றான். தேவதூதன் யாக்கோபு என்னும் அவன் பெயரை இஸ்ரவேல் என்று மாற்றி, அவனை ஆசீர்வதித்தார். இஸ்ரவேல் என்றால், 'தேவனுடைய பிரபு' என்பது அர்த்தம் (ஆதி. 32:26-29).

8.. யாக்கோபு தேவதூதனோடு போராடினது. ஜெபத்தில் போராடுவதைக் காட்டுகிறது

**போதனை:**

யாக்கோபு தேவனைப் பற்றிப் பிடித்துக்கொண்டு ஜெபத்தில் போராடி ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொண்டதுபோல நாம் தேவசமூகத்தில் கருத்தாய் ஜெபித்து அவரிடத்திலிருந்து ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

**மனப்பாடம்:** சங்கீதம் 118:5.

-------------

## பாடம் 7

## யோசேப்பின் இரு சொப்பனங்கள்

ஆதி. 37:1-11

**பொருளடக்கம்:**

1. யாக்கோபுக்குப் பன்னிரண்டு குமாரர் இருந்தனர். யோசேப்பு அவனுடைய முதிர் வயதில் பிறந்தான். ஆதலால் யாக்கோபு அவனை அதிகமாய் நேசித்து, அவனுக்குப் பல வருணமான அங்கியைச் செய்து கொடுத்தான். அவன் தன் சகோதரர்களுடைய துன்மார்க்கத்தைத் தன் தகப்பனுக்கு அறிவித்து வந்தான் (ஆதி. 37:2, 3).

2. தகப்பன் அவர்கள் எல்லாரைக் காட்டிலும் அவனை அதிகமாய் நேசித்தபடியால் சகோதரர் அவனைப் பகைத்தனர் (ஆதி. 37:4).

3. அந்நாட்களில் யோசேப்பு ஒரு சொப்பனங் கண்டு அதைத் தன் சகோதரருக்கு அறிவித்தான். அவன் கண்ட சொப்பனத்தில், தன் சகோதரரியின் அரிக்கட்டுகள் தன் அரிக்கட்டைச் சுற்றி வணங்கி நின்றது (ஆதி. 37:5-7).

4. இந்த சொப்பனத்தைக் கேட்டவுடனே, அவன் சகோதரர்கள் அவனை அதிகமாய்ப் பகைத்தனர் (ஆதி. 37:8).

5. யோசேப்பு பின்னும் ஒரு சொப்பனம் கண்டு அதைத் தன் தகப்பனுக்கும் சகோதரர்களுக்கும் அறிவித்தான். சூரியனும் சந்திரனும் பதினொரு நட்சத்திரங்களும் தன்னை வணங்கினதாக அவன் கண்டான் (ஆதி. 37:9).

6. அவன் தகப்பன், 'நானும் உன் தாயாரும் உன் சகோதரரும் தரைமட்டும் குனிந்து உன்னை வணங்க வருவோமா?' என்று அவனைக் கடிந்துகொண்டான் (ஆதி. 37:10).

7. அவன் சகோதரர் அவன்மேல் பொறாமை கொண்டார்கள். அவன் தகப்பனோ அவன் சொன்னதை மனதிலே வைத்துக்கொண்டான் (ஆதி. 37:1).

**போதனை:**

நாம் பாவத்தை வெறுத்து, தேவனுக்குப் பிரியமாய் ஜீவிப்போமானால், தேவன் நம்மை ஆசீர்வதித்து, பரலோகத்தின் இரகசியங்களை நமக்கு வெளிப்படுத்தித் தருவார்.

**மனப்பாடம்:** சங்கீதம் 25:14.

-------------

## பாடம் 8

## சிறைச்சாலையில் யோசேப்பு

ஆதி. 37:13-36 ; அதி, 39, 40

**பொருளடக்கம்:**

1. யோசேப்பு தன் சகோதரரின் சுக செய்தியை விசாரிக்கும்படியாகப் போனபோது, அவர்கள் அவனைப் பிடித்து ஒரு குழியில் போட்டார்கள். பின்பு அவர்கள் அவனைக்

குழியிலிருந்து எடுத்து இஸ்ரவேலருக்கு விற்றுப்போட்டார்கள். இஸ்மவேலர் அவனை எகிப்துக்குக் கொண்டுபோய், பார்வோனுடைய பிரதானியாயிருந்த போத்திபார் என்பவனுக்கு விற்றார்கள். போத்திபாருடைய வீட்டில் அவன் பொய்யாய்க் குற்றஞ்சாட்டப்பட்டு, சிறையிலிடப்பட்டான்.

2. சிறையிலுங்கூட கர்த்தர் அவனோடுகூட இருந்து அவன் செய்வதையெல்லாம் வாய்க்கச் செய்தார் (ஆதி. 39:20, 23).

3. பானபாத்திரக்காரரின் தலைவனும் சுயம்பாகிகளின் தலைவனுங்கூட சிறைச்சாலையில் காவல்பண்ணப்பட்டிருந்தனர் (ஆதி. 40:2, 3).

4. பானபாத்திரக்காரரின் தலைவனின் சொப்பணம் (ஆதி. 40:9-11).

5. யோசேப்பு இச்சொப்பனத்திற்குக் கொடுத்த அர்த்தம் (ஆதி. 40:12, 13).

6. சுயம்பாகிகளின் தலைவனின் சொப்பனம் (ஆதி. 40:16, 17).

7. யோசேப்பு இச்சொப்பனத்திற்குச் சொன்ன அர்த்தம் (ஆதி. 40:18, 19).

8. இச்சொப்பனங்களுக்கு அவன் சொன்ன அர்த்தம் மூன்றாம் நாளில் நிறைவேறியது. பானபாத்திரக்காரரின் தலைவன் மறுபடியும் பானம் கொடுக்கிற தன் உத்தியோகத்தில் வைக்கப்பட்டான்; ஆயினும் அவன் யோசேப்பை நினையாது மறந்து போனான். எனவே யோசேப்பைச் சிறைச்சாலையிலிருந்து விடுதலையாக்கும்படி அவனுக்கு உதவி செய்ய அவன் பிரயாசப்படவில்லை.

**போதனை:**

நாம் தேவனுக்குப் பயந்து ஜீவித்தால், நாம் எங்கிருந்தாலும், தேவன் நம்முடனே கூடயிருந்து நம்மை ஆசீர்வதிப்பார்.

**மனப்பாடம்:** ஏசாயா 26:3

-------------

## பாடம் 9

## எகிப்தில் யோசேப்பு (பகுதி I)

ஆதி. 41:1-44

**பொருளடக்கம்:**

1. பார்வோன் கண்ட சொப்பனங்கள் (ஆதி. 41:1-7).

2. பானபாத்திரக்காரரின் தலைவன் யோசேப்பை நினைவுகூர்ந்து பார்வோனுக்கு அவனைக் குறித்து அறிவித்தான். யோசேப்பு சிறைச்சாலையிலிருந்து அழைக்கப்பட்டான் (ஆதி. 41:9-14).

3. யோசேப்பு பார்வோன் கண்ட சொப்பனங்களின் அர்த்தத்தைச் சொன்னான் (ஆதி. 41:25-30).

4. அதன்மூலம் யோசேப்பு மேலான நிலவரத்திற்கு உயர்த்தப்பட்டான் (ஆதி. 41:40).

**போதனை:**

யோசேப்பு உண்மையுள்ளவனாயிருந்தபடியால், சிறைச் சாலையிலிருந்து அரண்மனைக்கு உயர்த்தப்பட்டான். அவனைப் போல் நாமும் இருப்போமாயின், நாமுங்கூட கர்த்தரால் ஏற்ற காலத்தில் உயர்த்தப்படுவோம்.

**மனப்பாடம்:** சங்கீதம் 136:23

-------------

## பாடம் 10

## எகிப்தில் யோசேப்பு (பகுதி II)

ஆதி. 41:40-57 ; அதி. 42

**பொருளடக்கம்:**

1. யோசேப்பு எகிப்து முழுவதற்கும் அதிகாரியாக்கப்பட்டான் (ஆதி. 41:41-43).

2. பஞ்சமுள்ள வருஷங்களுக்கென்று யோசேப்பு தானியங்களைச் சேர்த்து பத்திரப்படுத்தினான் (ஆதி. 41:48, 49).

3. பஞ்சம் உண்டானபோது யோசேப்பின் சகோதரர் தானியம் வாங்கும்படி எகிப்துக்கு வந்தனர் (ஆதி. 42:3).

4. யோசேப்பும் அவன் சகோதரரும் சந்தித்தல் (ஆதி. 42:7-26).

5. வெள்ளி பானபாத்திரத்தின் மூலம் சகோதரர் கிலேசத்திற்குள்ளானது (ஆதி. 44:2-13).

6. யோசேப்பு, தன்னைத் தன் சகோதரருக்கு வெளிப்படுத்தினான் (ஆதி. 44:2-13).

7. யாக்கோபும் அவன் குடும்பத்தாரும் எகிப்திற்கு வந்தனர் (ஆதி. 46:5, 6).

8. யோசேப்பு அவர்களுக்கு ஆகாரங்கொடுத்து ஆதரித்தான் (ஆதி. 47:12).

**போதனை:**

யோசேப்பு உயர்த்தப்பட்டபோதிலும் தீமைக்குத் தீமை செய்யாமல் நன்மை செய்தான். நாமும் அவ்வண்ணமாகவே செய்து தேவனுடைய சுபாவத்தை வெளிப்படுத்த வேண்டும்.

**மனப்பாடம்:** ரோமர் 12:21

-------------

## பாடம் 11

## முப்பத்தெட்டு வருடங்களாக வியாதியாயிருந்த மனுஷன் சுகமாக்கப்பட்டது

யோவான் 5:1-9

**பொருளடக்கம்:**

1. பெதஸ்தா குளத்தினருகே அநேக வியாதிஸ்தர் காத்துக் கொண்டிருந்தனர் (யோவான் 5:2, 3).

2.தூதன் தண்ணீரைக் கலக்கினபின்பு முதலில் அதற்குள் இறங்குகிறவன் சுகம் பெற்றுக்கொள்வான் (யோவான் (5:4).

3. முப்பத்தெட்டு வருடங்களாக வியாதியிருக்க ஒரு மனிதன் அங்கு இருந்தான் (யோவான் 5:5).

4. இயேசு அவனிடம், ‘சொஸ்தமாக வேண்டுமென்று விரும்புகிறாயா?‘ என்று கேட்டார் (யோவான் 5:6).

5. வியாதிஸ்தன் கொடுத்த பதில் (யோவான் 5:7).

6. இயேசு அவனைச் சுகமாக்கினார் (யோவான் 5:8, 9).

**போதனை:**

நமக்கு உதவி செய்ய ஒருவரும் இல்லாதிருக்கும்போது இயேசு வந்து நமக்கு உதவி செய்கிறார்.

**மனப்பாடம்:** எபிரேயர் 13:6

-------------

## பாடம் 12

## பேதுருவும் மீன் பிடித்தலும்

லூக்கா 5:1-11

**பொருளடக்கம்:**

1. கெனேசரேத் கடலருகே திரளமான ஜனங்கள் தேவ வசனத்தைக் கேட்கும்படி இயேசுவினிடத்தில் நெருங்கினார்கள் (லூக்கா 5:1).

2. இயேசு கடற்கரையில் நின்றிருந்த சீமோனுடைய படவில் ஏறி ஜனங்களுக்குப் போதகம் பண்ணினார் (லூக்கா 5:2, 3).

3. போதகம்பண்ணி முடித்த பின்பு இயேசு சீமோனை நோக்கி: ‘ஆழத்திலே தள்ளிக் கொண்டு போய், மீன் பிடிக்கும்படி, உங்கள் வலைகளைப் போடுங்கள்’ என்று சொன்னார் (லூக்கா 5:4).

4. அதற்கு சீமோன், 'இரா முழுவதும் நாங்கள் பிரயாசப்பட்டும் ஒன்றும் அகப்படவில்லை; ஆகிலும் உம்முடைய வார்த்தையின்படியே வலையைப் போடுகிறேன்' என்று சொல்லி, வலையைப் போட்டான் (லூக்கா 5:5).

5. அப்போது வலை கிழிந்து போகத்தக்கதாக மிகுதியான மீன்களைப் பிடித்தார்கள் (லூக்கா 5:6).

6. அவர்கள் மற்ற படவிலிருந்தவர்களைத் தங்களுக்கு வந்து உதவி செய்யும்படிக்கு சைகைகாட்டினார்கள் (லூக்கா 5:7).

7. திரளான மீன்களைப் பிடித்ததினமித்தம் சீமோன் பேதுரு பிரமிப்படைந்து, இயேசுவின் பாதத்தில் விழுந்து, 'ஆண்டவரே, நான் பாவியான மனுஷன், நீர் என்னை விட்டுப் போக வேண்டும்' என்று சொன்னான் (லூக்கா 5:8, 9).

8. இயேசு சீமோனை நோக்கி, 'பயப்படாதே, இதுமுதல் நீ மனுஷரைப் பிடிக்கிறவனாயிருப்பாய்' என்று சொன்னார் (லூக்கா 5:10).

9. சீமோன் பேதுருவும் அவனோடிருந்தவர்களும் எல்லாவற்றையும் விட்டுவிட்டு இயேசுவுக்குப் பின்சென்றனர் (லூக்கா 5:10, 11).

**போதனை:**

நாம் அற்பமான நன்மையைச் செய்தாலும், அதற்குப் பதிலாகக் கர்த்தர் ஏராளமாய் ஆசீர்வதிக்கிறார்.

**மனப்பாடம்:** எசாயா 1:9

-------------

## பாடம் 13

## இயேசு திமிர்வாதக்காரனைச் சுகமாக்கியது

மாற்கு 2:1-12

**பொருளடக்கம்:**

1. இயேசு கப்பர்நகூமில் ஒரு வீட்டிலிருக்கிறார் என்று ஜனங்கள் கேள்விப்பட்டு, வாசலுக்கு முன்னும் நிற்க இடம் போதாதபடிக்கு அநேகர் கூடி வந்தனர் (மாற்கு 2:1, 2).

2. இயேசு அவர்களுக்கு வசனத்தைப் போதித்தார். நாலுபேர் திமிர்வாதக்காரன் ஒருவனைச் சுமந்துகொண்டு அவரிடத்தில் வந்தனர் (மாற்கு 2:2, 3).

3. ஜனக்கூட்டத்தினிமித்தம் அவருக்குச் சமீபமாய் வரமுடியாமல் அவர் இருந்த வீட்டின் மேற்கூரையைப் பிரித்து திமிர்வாதக்காரன் கிடந்த படுக்கையை இறக்கினார்கள் (மாற்கு 2:4).

4. இயேசு அவர்களுடைய விசுவாசத்தைக் கண்டு, திமிர்வாதக்காரனை நோக்கி, 'மகனே, உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டது' என்று கூறினார் (மாற்கு 2:5).

5. இதைக் கேட்ட வேதபாரகர், தேவன் ஒருவர் மாத்திரமே பாவங்களை மன்னிக்கத்தக்கவராகையால் இவர் தேவதூஷணம் சொல்லுகிறார் என்று தங்கள் இருதயங்களில் சிந்தித்துக் கொண்டிருந்தார்கள் (மாற்கு 2:6, 7).

6. இயேசு அவர்களிடம், பூமியிலே பாவங்களை மன்னிக்க மனுஷகுமாரனுக்கு அதிகாரம் உண்டென்பதை அவர்கள் அறிய வேண்டுமென்று கூறினார் (மாற்கு 2: 8-10).

7. பின்பு இயேசு திமிர்வாதக்காரனிடம், 'நீ எழுந்து, உன் படுக்கையை எடுத்துக்கொண்டு, உன் வீட்டுக்குப் போ' என்று சொன்னார் (மாற்கு 2:11).

8. அவன் உடனே எழுந்து தன் படுக்கையை எடுத்துக்கொண்டு எல்லோருக்கும் முன்பாகப் போனான் (மாற்கு 2:12).

**போதனை:**

நாம் நம்முடைய விசுவாசத்தைக் கிரியைகளின் மூலம் வெளிப்படுத்தும்போது, கர்த்தர் அதைக் கனம்பண்ணுவார்.

**மனப்பாடம்:** யாக்கோபு 2:26

-------------

## பாடம் 14

## இயேசு பன்னிரண்டு அப்போஸ்தலரைத் தெரிந்தெடுத்தது

லூக்கா 5:1-9

**பொருளடக்கம்:**

1. இயேசு ஜெபம்பண்ணும்படியாக ஒரு மலையின்மேல் ஏறி இராமுழுவதும் தேவனை நோக்கி ஜெபம்பண்ணிக் கொண்டிருந்தார் (லூக்கா 6:12).

2. பொழுது விடிந்தபோது, அவர் தமது சீஷர்களை வரவழைத்து அவர்களில் பன்னிரண்டு பேரைத் தெரிந்துகொண்டு, அவர்களுக்கு அப்போஸ்தலர் என்று பேரிட்டார் (லூக்கா 6:13).

3. அப்போஸ்தலன் என்பவன் அனுப்பப்பட்டவன் ஆவான் (யோவான் 20:21).

4. அவர்கள் பெயர்கள் (லூக்கா 6:14-16).

5. இயேசு அவர்களுக்குக் கொடுத்த வல்லமையும் அதிகாரமும் (லூக்கா 9:1, 2).

**போதனை:**

இயேசு ஜெபித்து தம்முடைய அப்போஸ்தலரைத் தெரிந்தெடுத்ததுபோல, நாமுங்கூட எல்லாவற்றையும் ஜெபத்துடன் செய்ய வேண்டும்.

**மனப்பாடம்:** எபிரெயர் 5:4

-------------

## பாடம் 15

## நூற்றுக்கு அதிபதியின் வேலைக்காரன் சுகம் பெற்றது

லூக்கா 7:1-10

**பொருளடக்கம்:**

1. ஒருமுறை இயேசு கப்பர்நகூமுக்குப் போனார். அங்குள்ள நூற்றுக்கதிபதிக்குப் பிரியமான வேலைக்காரன் வியாதிப்பட்டு, மரண அவஸ்தையாயிருந்தான் (லூக்கா 7:1, 2).

2. இயேசு அங்கு வந்திருக்கிறார் என்று அந்த நூற்றுக்கு அதிபதி கேள்விப்பட்டு, அவரிடம் யூதருடைய மூப்பரை அனுப்பி, அவர் வந்து தன் வேலைக்காரனைச் சுகமாக்க வேண்டுமென்று வேண்டிக்கொண்டான் (லூக்கா 7:3, 4).

3. அவர் நூற்றுக்கதிபதியின் வீட்டிற்குச் சமீபமாக வந்த போது அவன் அவரிடம் தன் சிநேகிதரை அனுப்பி, இயேசு தன் வீட்டிற்கு வர தான் பாத்திரன் அல்ல என்றும், அவர் ஒரு வார்த்தை சொன்னால் போதும், தன் வேலைக்காரன் சுகமாவான் என்றும் சொல்லி அனுப்பினான் (லூக்கா 7:6-8).

4. இதைக் கேட்ட இயேசு ஆச்சரியமடைந்து, 'இஸ்ரவேலருக்குள்ளும் நான் இப்படிப்பட்ட விசுவாசத்தைக் காணவில்லை' என்று கூறினார் (லூக்கா 7:9).

5. அனுப்பப்பட்டவர்கள் திரும்பி வந்தபோது வேலைக்காரன் சுகமடைந்திருப்பதைக் கண்டார்கள் (லூக்கா 7:10).

**போதனை:**

நம்மை நாமே தாழ்த்தி கர்த்தரை விசுவாசிப்போமாயின் இன்றைக்கும் அவர் தம்முடைய வார்த்தையினால் நம்மை சுகமாக்க உண்மையுள்ளவராயிருக்கிறார்.

**மனப்பாடம்:** சங்கீதம் 107:20

-------------

## பாடம் 16

## இயேசு நாயீனூர் விதவையின் மகனை உயிரோடெழுப்பியது

லூக்கா 7:11-17

**பொருளடக்கம்:**

1. இயேசு ஒருநாள் நாயீன் என்னும் ஊருக்குப் போனார் அவருடைன சீஷர்களும் அவருடனேகூடப் போனார்கள் (லூக்கா 7:11).

2. இயேசு ஊரின் வாசலுக்குச் சமீபித்தபோது மரித்துப்போன ஒரு வாலிபனை அடக்கும்பண்ணும்படியாகக் கொண்டு வந்ததை இயேசு கண்டார். அவன் தன் தாய்க்கு ஒரே மகனாயிருந்தான். அவள் கைம்பெண்ணாயிருந்தாள் (லூக்கா 7:12).

3. அவள் அழுதுகொண்டு பின்னாலே வந்து கொண்டிருந்தாள். கர்த்தர் அவளைப் பார்த்து, அவள்மேல் மனதுருகி, 'அழாதே' என்று சொன்னார் (லூக்கா 7:13).

4. இயேசு பாடையின் அருகில் வந்து பாடையைத் தொட்டு, 'வாலிபனே, எழுந்திரு என்று உனக்குச் சொல்லுகிறேன்' என்றார் (லூக்கா 7:14).

5. உடனே மரித்தவன் எழுந்து உட்கார்ந்து பேசத் தொடங்கினான் (லூக்கா 7:15).

6. எல்லாரும் பயம் அடைந்து: மகா தீர்க்கதரிசியானவர் நமக்குள்ளே தோன்றியிருக்கிறார் என்றும், தேவன் தமது ஜனங்களைச் சந்தித்தார் என்றும் சொல்லி, தேவனை மகிமைப்படுத்தினார்கள் (லூக்கா 7:16).

7. இதிலிருந்து இயேசுவுக்கு மரித்தோரை உயிரோடே எழுப்ப முடியும் என்று நாம் அறிகிறோம்.

**போதனை:**

இயேசு மரித்தோரை எழுப்பக்கூடிய சர்வ வல்லமையுள்ள தேவன்.

**மனப்பாடம்:** எரேமியா 32:27

-------------

## பாடம் 17

## பிள்ளைகளின் நண்பர்

மாற்கு 10:13-16

**பொருளடக்கம்:**

1. சில தாய்மார் தங்கள் சிறு பிள்ளைகளை இயேசுவிடத்தில் கொண்டு வந்தார்கள் (மாற்கு 10:13).

2. இயேசு தங்கள் பிள்ளைகளை ஆசீர்வதிக்க வேண்டும் என்று அந்தத் தாய்மார் விரும்பினார்கள் (மாற்கு 10:13).

3. சீஷர்கள் இயேசுவைத் தொந்தரவு செய்ய விரும்பாமல் அவர்களை அதட்டினார்கள் (மாற்கு 10:13).

4. இயேசுவோ சிறுபிள்ளைகள் அனைவரையும் நேசித்தபடியால் அவர்கள் அதட்டுவதைக் கண்டு விசனமடைந்து, "சிறு பிள்ளைகள் என்னிடத்தில் வருகிறதற்கு இடங்கொடுங்கள்; அவர்களைத் தடைபண்ணாதிருங்கள்; தேவனுடைய ராஜ்யம் அப்படிப்பட்டவர்களுடையது" என்றார் (மாற்கு 10:14).

5. பின்பு இயேசு பிள்ளைகளை அணைத்துக்கொண்டு அவர்கள்மேல் கைகளை வைத்து அவர்களை ஆசீர்வதித்தார் (மாற்கு 10:16).

6. சிறுபிள்ளைகளை மாதிரியாக உபயோகித்து இயேசு தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்து அவர்களுக்குக் கற்பித்தார் (மாற்கு 10:15).

**போதனை:**

சிறு பிள்ளைகளாகிய நம்மை இயேசு அதிகமாய் நேசிக்கிறார். நாம் அவருடைய ஆசீர்வாதங்களை விரும்பி அவரிடம் சென்றால் அவர் நம்மை நிச்சயமாய் ஆசீர்வதிப்பார்.

**மனப்பாடம்:** மத்தேயு 18:3

--------------

## பாடம் 18

## இயேசு குருடனாயிருந்த பர்திமேயுவுக்குப் பார்வையளித்தது

மாற்கு 10:46-52

**பொருளடக்கம்:**

1. இயேசுவும் அவருடைய சீஷர்களும் திரளான ஜனங்களும் எரிகோவை விட்டுப் புறப்பட்டு வருகிறபோது திமேயுவின் மகனாகிய பர்திமேயு என்னும் ஒரு குருடன் வழியருகே உட்கார்ந்து, பிச்சை கேட்டுக் கொண்டிருந்தார். (மாற்கு 10:46).

2. அவன், இயேசு அவ்வழியே வருகிறாரென்று கேள்விப்பட்டு, 'இயேசுவே, தாவீதின் குமாரனே, எனக்கு இரங்கும்' என்று கூப்பிடத் தொடங்கினான் (மாற்கு 10:47).

3. மற்றவர்கள் அவனை அதட்டிய போதிலும், அவனோ, 'தாவீதின் குமாரனே, எனக்கு இரங்கும்' என்று முன்னிலும் அதிகமாய்க் கூப்பிட்டான் (மாற்கு 10:48).

4. இயேசு அவனை அழைத்து அவனை சுகமாக்கினார் (மாற்கு 10:49-52).

5. உடனே அவன் பார்வையடைந்து இயேசுவுக்குப் பின் சென்றான் (மாற்கு 10:52).

**போதனை:**

கர்த்தர் நம்முடைய ஜெபங்களைக் கேட்டு, நமக்கு உதவி செய்கிற இரக்கமுள்ள தேவனாயிருக்கிறார்.

**மனப்பாடம்:** சங்கீதம் 120:1

-------------

## பாடம் 19

## விதவையின் காணிக்கை

மாற்கு 12:35 ; 41-44

**பொருளடக்கம்:**

1. இயேசு தேவாலயத்தில் உபதேசம்பண்ணிக்கொண்டிருந்தார் (மாற்கு 12:35).

2. இயேசு காணிக்கைப் பெட்டிக்கு எதிராக உட்கார்ந்து அதில் ஜனங்கள் காணிக்கைகளைப் போடுகிறதைப் பார்த்துக் கொண்டிருந்தார் (மாற்கு 12:41).

3. ஐசுவரியவான்கள் அதிகமாய்ப் போட்டது (மாற்கு 12:41).

.

4. விதவையின் காணிக்கை (மாற்கு 12:42).

5. இயேசு தம்முடைய சீஷர்களை அழைத்து, அவளுடைய காணிக்கையைப் பற்றிய தம் அபிப்பிராயத்தை அவர்களிடம் கூறினார் (மாற்கு 12:43, 44).

6. விதவைக்கு விசுவாசமும் தேவன்மேல் பெரிதான அன்பும் இருந்தபடியினாலேயே, தன் ஜீவனத்துக்கு உண்டாயிருந்ததையெல்லாம் அவள் கொடுக்கக் கூடியவளாயிருந்தாள்.

**போதனை:**

விதவை, தன் வறுமையிலும், தன் ஜீவனத்துக்கு உண்டாயிருந்ததையெல்லாம் கர்த்தருக்குக் கொடுத்தாள். அதுபோன்றே நாம் நம் ஜீவனையுங்கூட கர்த்தருக்கென்று கொடுக்க ஆயத்தமாயிருக்க வேண்டும்.

**மனப்பாடம்:** மாற்கு 12:30

----------------

## பாடம் 20

## இயேசு காற்றையும் கடலையும் அமர்த்தினது

மாற்கு 4:35-41

**பொருளடக்கம்:**

1. ஒருநாள் இயேசுவும் அவருடைய சீஷர்களும் படவில் பிரயாணம் செய்தனர் (மாற்கு 4:35, 36).

2. அப்பொழுது பலத்தசுழல் காற்று உண்டாகி படவு நிரம்பத்தக்கதாக அலைகள் அதின்மேல் மோதியது (மாற்கு 4:37).

3. அப்பொழுது இயேசு கப்பலின் பின்னணியத்தில் தலையணை வைத்து நித்திரையாயிருந்தார் (மாற்கு 4:38).

4. சீஷர்கள் அவரை எழுப்பி 'போதகரே, நாங்கள் மடிந்து போகிறது உமக்குக் கவலையில்லையா' என்றனர் (மாற்கு 4:38).

5. அவர் எழுந்து காற்றையும் கடலையும் அதட்டி அவற்றை அமர்த்தினார் (மாற்கு 4:39).

6. இயேசு சீஷர்களின் பயத்தையும் அவிசுவாசத்தையும் பற்றி அவர்களுக்கு உணர்த்தினார் (மாற்கு 4:40).

7. நடந்த சம்பவத்தைக் குறித்து சீஷர்கள் மிகவும் பயந்து ஆச்சரியப்பட்டனர் (மாற்கு 4:41).

**போதனை:**

நம்முடைய தேவன் இயற்கைக்கு மேலான காரியங்களைச் செய்ய வல்லவராயிருக்கிறார். கர்த்தராலே கூடாத காரியம் ஒன்றுமில்லை.

**மனப்பாடம்:** சங்கீதம் 33:9

----------------